Deposition of Witness for : PW-1 | Date : 10/10/2023

Case No. : O.S. 49/2021 | Nationality : Indian

Name : பன்னீர்செல்வம் | Religion :

Father's/Husband's Name : ரெங்கநாதன் | Age :70

Village :

Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1972 ம் ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை வெளிநாட்டில் வேலை செய்து வந்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டங்களில் எனது சொத்தினை நிர்வாகம் செய்து வந்தது எனது சகோதரர் சுந்தரேசனா என்றால் இல்லை. அவர் பராமரிப்பு தான் செய்து வந்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது சகோதரர் தான் நிர்வாகம் செய்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2017 ம் ஆண்டிற்கு பிறகு தாவா சொத்தை யார் நிர்வாகம் செய்து வந்தது என்றால் 1996 ம் ஆண்டு முதல் நானும், எனது மனைவியும் நிர்வாகம் செய்து வந்தோம்.

2. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலம் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிரூபண வாக்குமூலம் பாரா-3 ல் நான் வெளிநாட்டிலிருந்து 2014 ம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்த பிறகு தாவா நிலங்களை இதுநாள் வரை நிர்வாகம் செய்து வரும் 1ம் பிரதிவாதியிடம் தாவா நிலங்கள் மற்றும் இதர நிலங்களை பொறுத்து வரவு செலவு கணக்குகளை காட்ட சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரரிடம் வரவு செலவு கணக்குகளை எப்போது கேட்டேன் என்றால் வரவு செலவு கணக்கை கேட்கவில்லை. கொடுத்த பணத்தை பற்றி 2017 ம் ஆண்டிற்கு பிறகு கேட்டேன். அவர் வரவு செலவு

கணக்குகளை கொடுத்தாரா என்றால் கொடுக்கிறேன் என்று சொன்னார் கொடுக்கவில்லை. அதற்காக எனது சகோதரருக்கு நான் சட்டப்படியான அறிவிப்பு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை.

3. 01/02/2021ம் தேதி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் தொல்லை அதிகமாக இருந்ததால் ரத்து செய்தேன். பொது அதிகார ரத்து பத்திரத்தில் வரவு செலவு கணக்குகளை காட்டாமல் என்னை ஏமாற்றி மோசடி செய்துவிட்டதால் ரத்து செய்வதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டுள்ளேன். 2021ம் வருடம் தாவா நிலத்தில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்தது என்றால் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. 21/04/2021 ம் தேதி நான் தாவா சொத்தில் நெல் சாகுபடி செய்தேன் என்பதை காட்டுவதற்கு எவ்வித அடங்கல் கணக்கும் இல்லை என்றால் சரியல்ல. 21/04/2021 ம் தேதி நான் தாவா சொத்தில் நெல் சாகுபடி செய்தேன் என்பதை காட்டுவதற்கு எவ்வித அடங்கல் கணக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. என்னால் எனது சகோதரர் சுந்தரேசனுக்கு கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணம் 27/12/2020 ம் தேதி நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். 27/12/2020 ம் தேதி தாவா சொத்தினை பொறுத்து எனது சகோதரர் அறிவரசு என்பவரிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு மேற்படி கிரைய ஒப்பந்தம் பற்றி எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் அறிவிப்பிற்கு வந்த பதில் மூலமாக தெரிந்து கொண்டேன். அதன் தொடர்ச்சியாக இதுநாள் வரை அறிவரசு மற்றும் எனது சகோதரருக்கு எதிராக சட்டப்படியான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் பதில் வந்தது. அதன் பிறகாவது இதுநாள் வரை நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு

உள்ளது. தாவா சொத்து சம்மந்தமாக சான்று வழங்கக்கூடாது என்று கிராம நிர்வாக அலுவலருக்கோ, வட்டாட்சியருக்கோ நான் மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எந்த தேதியில் மனு கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. அந்த மனுவின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கையில் உள்ளது.

5. மேற்படி மனுவின் நகலை நான் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் தேவைப்படாததால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் தான் உள்ளது. தாவா சொத்தின் சுவாதீனம் 27/12/2020 ம் தேதியில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் அறிவரசு என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்த தொகையை நான் எனது சகோதரர் மூலமாக பெற்றுக்கொண்டதால் அந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்த தொகையை வாங்கவில்லை.

6. அந்த கிரைய ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த கிரைய ஒப்பந்தம் மோசடியானது மற்றும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று கூறி நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்குடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் அந்த கிரைய ஒப்பந்ததை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் நான் அந்த பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை.

7. தாவா சொத்தை பொறுத்து முறையான வகையில் கடந்த 27/12/2020 ம் தேதி அறிவரசு என்பவர் பெயரில் எனது சகோதரர் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றாலும், அதன் விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அதனை மறைத்து நான் சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும் எனக்கு ஞாபகமில்லை. நான் 2021ம் ஆண்டு தாவா சொத்தை வேறு நபரிடம் தாவா சொத்தை அதிகப்படியான தொகைக்கு கிரையம் பேசி அதனை மறைத்து லாப நோக்குடன் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் இருந்து வரவில்லை என்றாலும், நான் தாவா சொத்தின் உரிமையாளர் என்ற நிலை மாறிவிட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.